**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

அசல் வழக்கு எண். 202/2020

வா.சா.1 – லோகநாதன்

09–09–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வழக்குரை 5–வது பத்தியில் எந்த பிரதிவாதி வாய்க்கால் மீது கட்டியதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் விஸ்வநாதன் கட்டினார். ஆனால் நான் அதனை வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை. 9ம் பத்தியில் எந்த பிரதிவாதி சுவர் கட்டினார் எனறு குறிப்பிட்டு கூறவில்லை என்றால் இருவரும் தான் சுவர் கட்டினார்கள். அதே போல் 10 ம் பத்தியில் எந்த பிரதிவாதியிடம் நான் சுவரை எடுக்க கேட்டேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. விஸ்வநாதனிடம் சுவரை எடுக்கவேண்டும் என்று சொல்லியுள்ளேன். 2ம் பிரதிவாதிக்கு எதிராக உள்ள வழக்கு மூலத்தை வழக்கில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியையும் அவரது கிரைய முன்னவரான அவரது கணவர் பழனியப்பனையும் நான் பார்த்தது இல்லை. பழனியப்பன் உயிருடன் இருந்த போதே அல்லது 2ம் பிரதிவாதி பாப்பாவிடமோ தண்ணீர் போவதை தடுப்பதைக் குறித்து சொன்னோனா என்றால் அவர்கள் கட்டிடம் கட்டாததால் சொல்லவில்லை.

2. தண்ணீர் போவதை மரித்து சுவர் கட்டியது யார் என்றால் விஸ்வநாதன் பாப்பா பழனியப்பன் இவ்வழக்கிற்கு தேவையற்றவர் என்றால் அவர் தண்ணீரை மரிக்கவில்லை ஆனால் அந்த பூமியில் பாத்தியம் உள்ளதால் அவரை சேர்த்துள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆன 1ம் பிரதிவாதி பழனியப்பனுக்கு கிரையம் செய்து கொடுத்த கிரையப்பத்திரத்தில் தண்ணீர் போகும் வாய்க்கால் பற்றிய விபரம் இல்லை என்றால் தெரியாது. வ.சா.ஆ.4 பாப்பா பழனியப்பனுக்கு அவரது மகள் எழுதிக்கொடுத்த விடுதலைப் பத்ர த்திலும் வாய்க்கால் பற்றிய குறிப்புகள் இல்லை என்றால் தெரியாது– மேற்படி

விவரங்கள் தெரிந்து தான் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய 50 செண்ட் பூமியில் தண்ணீர் போகும் வாய்க்கால் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. சிமெண்ட் பைப் வழியாக தண்ணீர் சென்று மேல் வாய்க்கால் வழியாக வருகிறது.

3. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 50 செண்ட் போக பாக்கி உள்ள இடமான நான் சொல்லும் 217 அடி வாய்க்காலில் தான் நானும் 1ம் பிரதிவாதியும் கட்டிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் விஸ்வநாதன் கட்டினார். ஆனால் நான் அதனை வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை. 9ம் பத்தியில் எந்த பிரதிவாதி சுவர் கட்டினார் எனறு குறிப்பிட்டு கூறவில்லை என்றால் இருவரும் தான் சுவர் கட்டினார்கள். அதே போல் 10 ம் பத்தியில் எந்த பிரதிவாதியிடம் நான் சுவரை எடுக்க கேட்டேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. விஸ்வநாதனிடம் சுவரை எடுக்கவேண்டும் என்று சொல்லியுள்ளேன். 2ம் பிரதிவாதிக்கு எதிராக உள்ள வழக்கு மூலத்தை வழக்கில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியையும் அவரது கிரைய முன்னவரான அவரது கணவர் பழனியப்பனையும் நான் பார்த்தது இல்லை. பழனியப்பன் உயிருடன் இருந்த போதே அல்லது 2ம் பிரதிவாதி பாப்பாவிடமோ தண்ணீர் போவதை தடுப்பதைக் குறித்து சொன்னோனா என்றால் அவர்கள் கட்டிடம் கட்டாததால் சொல்லவில்லை.

2. தண்ணீர் போவதை மரித்து சுவர் கட்டியது யார் என்றால் விஸ்வநாதன் பாப்பா பழனியப்பன் இவ்வழக்கிற்கு தேவையற்றவர் என்றால் அவர் தண்ணீரை மரிக்கவில்லை ஆனால் அந்த பூமியில் பாத்தியம் உள்ளதால் அவரை சேர்த்துள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆன 1ம் பிரதிவாதி பழனியப்பனுக்கு கிரையம் செய்து கொடுத்த கிரையப்பத்திரத்தில் தண்ணீர் போகும் வாய்க்கால் பற்றிய விபரம் இல்லை என்றால் தெரியாது. வ.சா.ஆ.4 பாப்பா பழனியப்பனுக்கு அவரது மகள் எழுதிக்கொடுத்த விடுதலைப் பத்ர

த்திலும் வாய்க்கால் பற்றிய குறிப்புகள் இல்லை என்றால் தெரியாது– மேற்படி விவரங்கள் தெரிந்து தான் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய 50 செண்ட் பூமியில் தண்ணீர் போகும் வாய்க்கால் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. சிமெண்ட் பைப் வழியாக தண்ணீர் சென்று மேல் வாய்க்கால் வழியாக வருகிறது.

3. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 50 செண்ட் போக பாக்கி உள்ள இடமான நான் சொல்லும் 217 அடி வாய்க்காலில் தான் நானும் 1ம் பிரதிவாதியும் கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் 1ம் பிரதிவாதி வாய்க்கால் மீது கட்டியுள்ளார் நான் வாய்க்காலை விட்டு தான் கட்டியுள்ளேன். தற்போது பௌதீக அமைப்பு படி தாவா இடத்தில் வாய்க்கால் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்டு வாய்க்கால் உள்ளதா அல்லது இல்லையா என்பதை கண்டறிவதற்கு எனக்கு ஆட்சோபணை இல்லை என்றால் ஆட்சேபணை இல்லை. நீதிமன்ற ஆணையர் கேட்டு நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் உள்ள வாய்க்கலை காட்டுவதற்கு புகைப்படம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்குரையில் சொல்லியுள்ளது போல் தணிணீர் போவதை எவ்வளவு அடி அடைத்துள்ளார்கள் என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் 5 அடி அடித்துள்ளதாக சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் அவ்வாறு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. 2010க்கு முன்பு இருந்தே தாவா வாய்க்கால் புலக்கத்தில் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்து இருந்தால் பழனியப்பனுக்கு கொடுத்து இருந்த கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டு இருப்பார்கள் என்ாறல் வாய்க்கால் இருந்தது அவர்கள் குறிப்பிட்டு இருந்தார்களா என்று தெரியாது. 2ம் பிரதிவாதியின் பூமியில் வாய்க்கால் ஏதும் இல்லை என்றால் வாய்க்கால் இருந்தது. தற்போது வாய்க்காலை நிரைவியதால் வாய்க்கால் இல்லை. நான் சொல்வது போல்

வாய்க்கால் நிரவப்படவில்லை என்றும் முதலில் இருந்தே அங்கு வாய்க்கால் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது சகோதரர் இருவருக்கும் ஏதும் மனக்கசப்பும் இல்லை இருவரும் கூட்டு சேர்ந்து 2ம் பிரதிவாதிககு தொந்தரவு கொடுக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 2ம் பிரதிவாதிக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒப்பம்,திருமதி.A.சுபஸ்ரீ.L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.